MJSSH Muallim Journal of Social Science and Humanities
Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 129-135 / ISSN: eISSN 2590-3691

ORIGINAL ARTICLE

# பெரிய புராணத்தில் தொண்டு நெறி

# SERVICE ETHICS IN PERIYA PURANAM

**மகேஸ்வரி தேவராஜு[1] / Mageswari Deverraju [1]**
[1]போர்ட்டிக்சன் தமிழ்ப்பள்ளி, நெகரி செம்பிலான், மலேசியா. / Port Dickson Tamil Primary School, Negeri Sembilan, Malaysia.
மின்னஞ்சல் / Email: mageswarideverraju@gmail.com

**Abstract**

The twelve holy books of 'Thirumurai' symbolise the Shaivism. From these twelve books, Sekhizhaar wrote about what he considers as the greatest book of all, which is 'Periya Puranam'. This 'Periya Puranam' speaks about the history of Shivam worshippers who lived in Tamil Nadu. It tells the level of devotion and services done by the 63 'Nayanmars'. A service is an action that is done by someone voluntarily and selflessly in order to help others. Service among fellow human being is considered as something equal to a service towards God. 'Nayanmars' considered this service as representation of their service to God. They valued this actions as their service to their religion as well to the society. Even though they had to overcome many obstacles and difficulties, they did not allow themselves to be distracted from their main focus or objective in life. This selfless act of service is what gave them happiness and peacefulness on earth and hereafter.

**Keywords**: Periya Puranam, service, Shivam worshippers

**ஆய்வுச் சாரம்**

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றன. அவற்றுள் பெரியதும் சிறந்ததுமாகக் கருதப்படுவது சேக்கிழாரால் அருளப்பட்ட பெரிய புராணம் எனும் பன்னிரண்டாம் திருமுறையாகும். தமிழ்நாட்டில் வெவ்வேறு மரபுகளில் தோன்றி இறை தொண்டாற்றிய சிவனடியார்களின் வரலாற்றை எடுத்தியம்புவதே பெரிய புராணம். 63 நாயன்மார்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் இந்நூலில் தொண்டு எனும் மாண்பே காப்பியப் பொருளாக உள்ளது. தொண்டு என்பது ஒருவர் தன்னலமின்றி பிறர்க்குச் செய்யும் உதவியையோ அல்லது சேவையையோ குறிக்கும். திருத்தொண்டு என்பது இறைவனுக்குச் செய்கின்ற தொண்டையும் அவன்பால் காதலுற்ற அடியார்கட்குச் செய்கின்ற தொண்டையும் ஒருசேரக் குறிக்கும். நாயன்மார்கள் அனைவரும் தொண்டு நெறியிலேயே இறை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 129-135 / ISSN: eISSN 2590-3691

பணியாற்றியவர்கள். இவர்களின் தொண்டு சமயத்தைச் சார்ந்து மட்டுமல்லாது சமுதாய வளர்ச்சிக்கும் துணைபுரிந்துள்ளது. தொண்டு நெறியில் பல இடர்களும் இடையூறுகளும் வந்தபோதிலும் நாயன்மார்கள் தங்களது குறிக்கோளினின்றும் சற்றும் பிறழாது வாழ்ந்தவர்கள். தன்னலம் கருதாத் தொண்டு நெறியே இம்மையிலும் மறுமையிலும் இவர்களுக்கு இன்பத்தை நல்கியது; முக்தியையும் அளித்தது.

**கருச்சொல்:** பெரிய புராணம், தொண்டு, அடியார்கள்

## முன்னுரை

பிறருக்குப் பயன்படும் வகையில் வாழ வேண்டும் என்பதே நாம் உலகில் பிறவி எடுத்ததன் நோக்கமாக அமைய வேண்டும். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவழிபாடு செய்வதோடு நின்றுவிடாமல் பிற உயிர்களுக்கும் தொண்டு செய்வதைத் தங்கள் கடமையாகக் கொண்டிருத்தல் நல்லது. இவ்வாறு அனைவரும் உணரத் தொடங்குங்கால் தன்னலம் மறைந்து பொதுநலம் மேலோங்கும். அத்தகு தொண்டுணர்வைப் பற்றிப் பேசுவதே பெரிய புராணம். தொண்டு எனும் பண்புக்கு ஓர் இலக்கணம் வகுத்து அதன்படி வாழ்பவர்கள் தொண்டர்கள். பெரிய புராணம் இறைவனிடத்தில் அடிமைத்திறம் கொண்டு அன்பு நெறியில் தொண்டாற்றிய அடியார்களைப் பற்றி தெளியப்படுத்துகின்றது.

## தொண்டு நெறி

'பொது நலத் தொண்டும் தியாகச் சாதனமும் இல்லாத வாழ்க்கை மேதகு வாழ்வல்ல' என்கிறார் க.திரவியம் (1974)[1]. தொண்டு செய்வதற்குத் தன்னலமற்ற மனமிருந்தால் மட்டுமே முடியும். பயன் கருதாமல் இடையூறுகளைக் கண்டும் பின்வாங்காமல் செய்வதே தொண்டாகும். இறைவன் அருளையே மூலதனமாகக் கொண்டு அவனுக்கும் அவன் அடியார்களுக்கும் மக்களுக்கும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்வதே தொண்டு. அடியார்கள் பிறருக்குத் தொண்டு செய்வதையே இறைவனிடத்தில் வேண்டி நின்றனர். தாயுமானவரும் இதனையே இறைவனிடத்தில் அன்பர் பணி செய்ய வேண்டுகின்றார்.

பெரிய புராணத்தில் தொண்டு எனும் பண்பே சிறந்து விளங்குகிறது. இது அடியார்களின் வாழ்வோடு நோக்கத்தக்கது. பிறரின் வளர்ச்சியைக் கண்டு ஏற்படும் தீய எண்ணங்களை நீக்கவல்லது பொது நலத்தொண்டே என்று கூறும் அழகரடிகளின் (2004)[2] கூற்று அடியார்களின் வாழ்வோடு தொடர்புடையது. பெரிய புராணம் காட்டும் அடியார்கள் தொண்டுள்ளம் படைத்தவர்கள். எனவே, தொண்டர்கள் எனப் போற்றப்பட்டனர். இவர்களின்

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 129-135 / ISSN: eISSN 2590-3691

தொண்டு பலவகை. சிவனடியார் தொண்டு, திருக்கோயில் தொண்டு, உழவாரத் தொண்டு, இறைவனுக்குச் செய்த தொண்டு, சமயத் தொண்டு எனப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவனடியார்களைச் சிவனாகவே கருதும் இயல்பு நாயன்மார்களிடம் இருந்தது. சிவனிடத்தில் கொண்ட அன்பால் அவன் அடியார்கட்குச் செய்த தொண்டு சிவத்தொண்டு ஆனது (அ.ச.ஞானசம்பந்தன், 1999)[3].

நள்ளிரவில் கொட்டும் மழையில் விதைநெல்லைக் கொண்டு அடியார்க்கு விருந்து வைத்த இளையான்குடி மாறனார், அடியார்களுக்குப் பேதமின்றி பாதபூசை செய்த கலிகம்பர், கோவணத் தொண்டு புரிந்த அமர்நீதியார், அடியார்களுக்குத் துணி வெளுத்துக் கொடுத்த திருக்குறிப்புத் தொண்டர், அடியார் அமுதுக்குச் செந்நெல் சேமித்த கோட்புலியார், தனியொருத்தியாய் அடியார்கட்கு உணவு, உடை கொடுத்து உபசரித்த புனிதவதியார், போரில் பெற்றக் கூலியை இறையடியார்க்காக்கிய முனையடுவர், சூதில் வென்ற பொருளை அடியார்க்கமுதாக்கிய மூர்க்கர், பிள்ளையையே அரிந்து அடியார்க்கு அமுது படைத்த சிறுதொண்டர் போன்றோர் சமுதாயத் தொண்டும் செய்தது தெரிய வருகிறது (ஆறுமுக நாவலர், 2008)[4]. இதனால்தான் அடியார்க்குச் செய்யும் தொண்டு இறைவனையே சாரும் என்கிறார் திருமூலர்.

**மக்கள் தொண்டு**

அடியார்கள் தன்னலங்கருதாமல் சமுதாயத்திற்கு அறவழியில் நின்று திருத்தொண்டு செய்பவர்கள்; எத்தகைய பணிகள் மக்களின் நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் வித்திடுமோ அத்தகைய குறிப்பறிந்து செயல்படும் அருளாளர்கள் என அ.கி.நாயுடு (1963)[5] குறிப்பிடுகின்றார். துன்பம் நேரிடும் போது மக்களுக்கு உதவுவது மக்கள் தொண்டாகிறது. தொண்டுள்ளம் படைத்த அடியார்கள் ஓரிடத்திலேயே இருப்பதில்லை. ஊர் ஊராகச் சென்று தொண்டு செய்வர். பெரிய புராணத்துள் நாயன்மார்களின் வரலாற்றில் இதனைக் காணலாம் (ஆறுமுக நாவலர், 2008)[4]. நாயன்மார்கள் இறைவனை வழிபடும் நோக்கத்திற்காகவே பல ஊர்களுக்கும் சென்றனர். இருப்பினும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை நன்கு உணர்ந்தவர்களாதலால் மக்கள் தொண்டையே முதன்மையாகக் கருதிச் செயலாற்றினர் (மதராஸ் பல்கலைக்கழகம், 1981)[6].

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் மக்கள் தொண்டு பலவிடத்தும் விவரிக்கப்பட்டுள்ளது. கொல்லிமழவரின் மகளுக்கு முயலகன் எனும் நோய் ஏற்பட்டமையால் அவள் ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டாள். அந்நாளில் அங்கு வந்த திருஞானசம்பந்தர் சிவபெருமானை எண்ணிப் பதிகம் பாட அப்பெண் குணமாகினாள். இதிலிருந்து அடியார்கள்

பிணியினின்றும் வாழ்வதுடன் மற்றவர்களையும் காப்பாற்றுகின்றனர் என்பது தெரிகிறது (மு.பெ.சத்தியவேல் முருகனார், 2002)[7]. மேலும், திருஞானசம்பந்தர் கொடி மாடச் செங்குன்றில் தங்கியிருந்தபோது அடியார்களுக்கு அந்நாட்டில் குளிர் நோய் ஏற்பட்டது. திருஞானசம்பந்தர் பதிகம் பாடி அந்நாட்டு அடியார்கள் நோயிலிருந்து விடுபட உதவினார் (ஆறுமுக நாவலர், 2008)[4]. தொற்று நோய் பரவினால் மருத்துவர்களின் உதவியை இன்றைய நாளில் நாடுகின்றனர். ஆனால், அன்று அடியார்களே மருத்துவராகவும் தொண்டு புரிந்துள்ளனர் என்பதும் இதனால் நிரூபனமாகிறது.

திருமருகலில் வணிகனைப் பாம்பு தீண்ட அவனது காதலி கதறி ஓலமிட்டாள். அங்கு வழிப்போக்கனாக வந்த திருஞானசம்பந்தர் 'சடையா எனுமால்' எனும் பதிகம் பாடி இறைவனை வேண்டி நின்றார். இறையருளால் வணிகன் உயிர்பெற்றெழ அவனுக்கும் அவன் காதலிக்கும் திருமணமும் நடத்தி வைத்தார். எனவே, அடியார்கள் என்பவர் உயிர் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றவர்களாகவும் உள்ளத்தால் ஒன்றியவர்களை இணைத்து வைக்கும் பண்புள்ளவர்களாவும் இருந்துள்ளனர் (மு.பெ.சத்தியவேல் முருகனார், 2002)[7]. அடியார்கள் சமுதாயத்தில் உள்ள இன்ப துன்பங்களையும் உணர்ச்சிகளையும் ஏற்று அதற்கேற்றவாறு தொண்டுள்ளம் படைத்தவர்களாயினர். இதனைச் சுந்தரரின் வரலாறு காட்டுகின்றது. அவிநாசியில் முதலையுண்ட சிறுவனை மீட்டுக் கொடுத்தார் சுந்தரர். சேக்கிழார்,

'.. .. சிறுவனை யான்
அந்த முதலை வாய் நின்று மழைத்துக் கொடுத்தே யவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவே னென்றார் சென்றார் இடர் களைவார்'

என்கிறார். அடியார்கள் இடர் தீர்த்தது இதனால் புலனாகிறது.

அடியார்கள் மக்களுக்கு உணவு கொடுத்தும் தொண்டாற்றியுள்ளனர். இறைவனின் அடியார்கள் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டும் அடியார்கள் இத்தகையத் தொண்டாற்றவில்லை என்கிறார் சைவத் திருவாளர் சி.கே.சுப்ரமணிய முதலியார் (1954)[8]. முன்பின் தெரியாதவர்களாயினும் அவர்களை உபசரிப்பதே அடியார்களின் பண்பெனச் சேக்கிழார் குறிப்பிடுவதாக அ.ச.ஞானசம்பந்தன் (1993)[3] தம் பெரிய புராணம் ஓர் ஆய்வு எனும் நூலில் கூறியுள்ளார். மேலும், சேக்கிழார் சைவ நெறி உலகம் தழுவியது என்ற கொள்கையினாலே அடியார்கள் அனைவருக்கும் உணவளித்தனர் எனும் கூற்றை முன்நிறுத்தியுள்ளார் (அ.ச. ஞானசம்பந்தன்,1999)[3]. இவற்றால் நாயன்மார்களின் தொண்டு மனப்பான்மையை நன்கு அறிய முடிகிறது. இவர்களின் தொண்டு இன்றையச் சமுதாயச் சூழலிலும் காணப்படுவதைப் பார்க்க முடிகிறது. எனவே, பண்பாடு நிறைந்த ஒரு சமுதாயத்தையே பெரிய புராணமும் உயர்த்திக் காட்டுகின்றது.

**மகேசன் தொண்டு**

இறை பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்வதை இது குறிக்கும். மேலும், இறைவனுக்குச் செய்யும் தொண்டையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியதும் தகும். தில்லைவாழ் அந்தணர்கள், ஆதி சைவ மரபினர், முப்போது திருமேனி தீண்டும் அடியார்கள் ஆகியோர் இதில் முதலிடம் பெற்றவர்கள் (மா.இராசமணிக்கனார், 1959)[9].

தமக்காக இன்றிப் பிறருக்காகத் செய்வது சமூகச் சேவையாகும். வழிபட வரும் அடியார்களிடத்தில் இறைவனைப் பற்றிய உண்மைகளையும் தத்துவங்களையும் எடுத்துக் கூறுவதும் இத்தகையச் சேவையேயாகும். சடையனார், இசைஞானியார் யாவரும் இதுபோன்ற அகத்தொண்டு புரிந்தவர்களேயாவர். கணம்புல்லர், கலியர், நமிநந்தியடிகள் ஆகியோர் திருக்கோயிலில் விளக்கேற்றும் தொண்டினைச் செய்தவர்கள். பலரும் வந்து இறைவனைத் தரிசிக்கும் ஆலயம் ஒளிபொருந்தியதாக இருக்க வேண்டும் என்பது இவர்களது ஆசை (ஆறுமுகம், 2004)[10]. மேலும், அகயிருளை நீக்கும் இறைவனை வழிபடுவோர்க்குப் புறயிருளை நீக்கும் திருவிளக்குத் திருப்பணி சமூகத் தொண்டாகவே கருதப்படுகிறது. திருக்கோயிலில் குங்கிலியத் தீபம் இடும் பணி குங்கிலியரால் மேற்கொள்ளப்பட்டது. இதன்வழி, உயிர்களிடம் நச்சுத்தன்மை பரவாமல் பாதுகாக்கும் மிகப் பெரியத் தொண்டைச் செய்தவராகிறார். திருநாளைப்போவார் நாயனார் புலையர் சாதியில் பிறந்தாலும் இறைவனின் பூசைக்காக வாசனைத் திரவியங்களையும் இசைகருவிக்காகத் தோல், வார் முதலியவற்றைக் கொடுத்தும் தொண்டாற்றியுள்ளார்.

அப்பர் பெருமான் தொண்டின் நெறியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். நாம் வழிபடும் இறைவனின் திருக்கோயில் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற நெறியை உணர்த்தியவர் அப்பரடிகள். இவர் இறைவனடி சேரும் இறுதி நேரம் வரை உழவாரத் தொண்டு புரிந்தவர் என்கிறார் சேக்கிழார் (மங்கையர்கரசி, 1972)[11]. இறைவனை மனம், வாக்கு, காயத்தினால் வணங்க வேண்டும். மனம் இறைவனை நித்தமும் சிந்திக்க, வாய் இறைவனது திருவைந்தெழுத்தை ஓத, உடலினால் பல தொண்டுகள் புரிந்தவர்கள் அடியார்கள். நாள்தோறும் காலை, மாலை என இரு வேளையும் இறைவனின் திருக்கோயிலைச் சுத்தப்படுத்தித் தொண்டாற்றியவர்களும் உண்டு. மேலும், திருக்கோயில்களில் இறைவனுக்காகப் பூமாலை கட்டிக் கொடுத்தவர்களும் உண்டு. தொண்டு செய்தால் இறைவனின் திருவடியை அடையலாம் என்று திருநாவுக்கரசரின் புராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார் (கா.சுப்ரமணியம் பிள்ளை,1940)[12].

சமுதாய வாழ்வில் நிறுவப்பட்டக் கோயில்கள் பண்பாட்டின் உண்மையை எடுத்துரைக்கின்றன என்கிறார் அ.மு.பரமசிவானந்தம் (1972)[13]. எனவே, சமயமானது

MJSSH Muallim Journal of Social Science and Humanities
Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 129-135 / ISSN: eISSN 2590-3691

தொண்டின் நெறியை உலகுக்கு உணர்த்திக் காட்டுவதோடு மட்டுமின்றி உலகம் உய்யவும் வழிகாட்டுகிறது (குறளகம்,1992)[14]. சமயக் குரவர்கள் பல ஊர்களுக்கும் சென்று பதிகம் பாடி இறைவனை வழிபட்டனர்; சைவ சமயத்தைப் பரப்பவும் செய்தனர் என்பது ந.சி.கந்தையா (2010)[15] அவர்களின் கருத்து. திருஞானசம்பந்தர் புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்தது; ஆண்பனையைக் காய்க்கச் செய்தது; மதுரையில் கூன் பாண்டியனின் வெப்பு நோய் தீர்த்துச் சைவத்தைத் தழைக்கச் செய்தது; அனல் வாதம் புனல் வாதம் புரிந்தது யாவுமே சைவ சமயத்தை நிலைநாட்டச் செய்த தொண்டுகளேயாகும். குலச்சிறையாரும் சைவ சமயம் தழைக்க அரசிக்குத் துணையாயிருந்து திருஞானசம்பந்தரை அழைத்துத் தொண்டாற்றினார் (மு.பெ.சத்தியவேல் முருகனார், 2002).[7]

தான் கெட்டாலும் மற்ற உயிர்களை வாழவைப்பதே சமயப் பண்பாடாகும். வாழும் காலத்தில் மட்டுமின்றி வீழ்ந்திடினும் கூட உலகம் வாழ வழி செய்வதும் சமயப் பண்பாடாகும். இத்தகைய நெறிகளையே சமயத் தலைவர்கள் பின்பற்றி வாழ்ந்தனர். இவர்களின் முயற்சியால் நிறுவப்பட்ட சமயப் பள்ளிகள் சமூகத் தொண்டாற்றும் களமாகவும் அமைந்தன. தம் இன்பத்தைத் தியாகம் செய்து மற்றவர் இன்பம் பெறுவதற்காக வாழ்தலே சமய வாழ்வாகும். தன்னை வருத்தி உலக மக்களை மகிழ்விக்கும் பண்பாட்டைச் சமயம் சமூகத்திற்கு வழங்குகிறது (அ.மு.பரமசிவானந்தம், 1972)[13]. இவ்வகையில் யார் தீங்கிழைத்தபோதும் தொண்டு எனும் குறிக்கோளிலிருந்து பிறழாமையே அடியார்களின் பண்பு என்பதைச் சேக்கிழார் உணர்த்தியுள்ளார். தண்டியடிகள், திருநாளைப் போவார் ஆகிய நாயன்மார்கள் மக்களின் பயன்பாட்டிற்கு உதவியாகத் தொண்டாற்றியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது (சுந்தர்.எஸ்,2001)[16].

**முடிவுரை**

நாயன்மார்களில் பலரின் தொண்டு உலகில் சைவ சமயத்திற்கு இன்றியமையாதது (ந.சி கந்தையா,2010)[15]. அக்காலக்கட்டத்தில் சைவம் மீண்டும் தழைத்தோங்க அறப்போராட்டம் நடத்தியவர்கள் நாயன்மார்கள். சமணர்களாயிருந்த அரசனையும் நாட்டு மக்களையும் சைவத்திற்குத் திருப்பிய பெருமை இவ்வடியார்களையே சாரும். பொறுமை, மனந்தளராமை, சகிப்புத் தன்மை, உறுதியான குறிக்கோள் ஆகியவை இவர்களது போராட்டம் வெற்றியடைய வழிவகுத்தது எனலாம்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Thiraviyam, K. (1974). *Nationalisms development through Tamil (தேசியம் வளர்த்த தமிழ்).* Chennai: Palaniappa Publication.
2. Alagaradikal. (2004). *Periya Puranam (பெரிய புராணம்).* Karakpur: Indian National Digital Library.
3. Nyanasambanthan, A. S. (1999). *Research on Periya Puranam (பெரிய புராணம் ஓர் ஆய்வு).* Chennai: Ganggai Book Centre.
4. Arumugam Navalar. (2008). *Thiruttondar history or Periya Puranam vasana kaviyam (திருத்தொண்டர் வரலாறு அல்லது பெரிய புராண வசனக் காவியம்).* Chennai: Sekkilar Publication.
5. Naidu, A. K. (1963). *Kavichakravarthi Kambar history (கவிச்சக்ரவர்த்தி கம்பர் வரலாறு).* Coimbutore: Coimbutore Publication.
6. Rathinasababathy, V. (1981). *Research on Thirunavukkarasar (திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு).* Chennai: Chennai University.
7. Satthiyavel Muruganar, M. P. (2014). *Research on Thirunyanasambanthar incarnation (திருஞானசம்பந்தரின் அவதார நோக்கம்: ஆய்வு).* Tamilnadu: Teiva Tamil Foundation.
8. Subramaniyam Mutaliyar, S. K. (1954). *Periya Puranam (பெரிய புராணம்).* Chennai: Chennai University.
9. Rasamanikkanar, M. (1959). *Saiva religion (சைவ சமயம்).* Karaikudi: Selvi Publication.
10. Arumugam. (2004). *Periya Puranam (பெரிய புராணம்).* Chennai: T.Nagar.
11. Manggayarkarasi. (1972). *Thirutondar Puranam by Seikkilar (சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்).* Chennai: Tamil Open University.
12. Subramaniam Pillai, K. (1940). *Seikkilar history and Periya Puranam research (சேக்கிழார் சரிதமும் பெரிய புராண ஆராய்ச்சியும்).* Chennai: Nannul Ulagam.
13. Paramasivanantham, A. M. (1972). *Tamil art (தமிழ்கலை).* Chennai: Chennai University.
14. Kuralagam. (1992). *Social reformation (சமுதாய மறுமலர்ச்சி).* Chennai.
15. Kandaiya, N. S. (2010). *History of Saiva religion (சைவ சமய வரலாறு).* Chennai: Santhiya Publication.
16. Sundar, S. (2008). Periya Puranam discription (*பெரிய புராணம் உரைநடை).* Chennai: Saguntalai Publication.